# தாரமங்கலம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரண கூட்டம்

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

2025 ஆம் ஆண்டு ஜீலை மாத கூட்டத்தொடர் 04.02.2026 ஆம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

முன்னிலை :– திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,
நகராட்சி மன்ற தலைவர்,
தாரமங்கலம் நகராட்சி.

**பொருள் எண்.1129 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் டிசம்பர் (01.12.2025 முதல் 31.12.2025 வரை) மற்றும் ஜனவரி (01.01.2026 முதல் 25.01.2026 வரை) மாதம் நிகழ்ப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 01.12.2025 முதல் 31.12.2025 வரை | 10 | 10 | 20 | 16 | 7 | 1 | 24 | 0 | 0 | 0 |
| 01.01.2026 முதல் 25.01.2026 வரை | 5 | 3 | 8 | 6 | 7 | 0 | 13 | 0 | 0 | 0 |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.550/2023/எச்1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1130 (2)**

தாரமங்கலம் நகராட்சியில் பகுதிகளுக்குப்பட்ட சமுதாய கழிப்பிடங்கள் மொத்தம் – 16 எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் சுத்தம் செய்திட, தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இந்நகர்மன்ற தீர்மான எண்.714(25) நாள்.06.03.2024 தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள Shubham Ganga

Seva Sansthan, Bangalore நிறுவனம் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறைகள் ஆணை நாள்.08.01.2025 பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.01.2026 தேதியுடன் முடிவடையுள்ளதால், பொது சுகாதாரப் பணிகள் அவசியத்தினை கொண்டு மேலும் 01.02.2026 முதல் 31.12.2026 வரையிலான காலங்களுக்கு Shubham Ganga Seva Sansthan, Bangalore நிறுவனத்திற்கு 16 எண்ணிக்கையிலான கழிப்பிடங்களை ஏற்கனவே வழங்கியுள்ள கட்டணம் மற்றும் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | சமுதாயக்கழிப்பிடம் அமைந்துள்ள இடங்கள் | வார்டு எண் | பணிக்கான கட்டணம் | உபயோகத்தில் உள்ள விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆம் | இல்லை |
| 1 | கசுவரெட்டிப்பட்டி, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 1 | 9000 | ஆம் | – |
| 2 | பனங்காடு , சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 2 | 9000 | – | இல்லை |
| 3 | பாரக்கல்லூர், சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 3 | 9000 | ஆம் | – |
| 4 | பெரியாம்பட்டி, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 4 | 9000 | – | இல்லை |
| 5 | வாரச்சந்தை பின்புறம், சமுதாயக்கழிப்பிடம் (ஆண்) | 6 | 9000 | ஆம் | – |
| 6 | வாரச்சந்தை பின்புறம், சமுதாயக்கழிப்பிடம்(பெண்) | 6 | 9000 | – | இல்லை |
| 7 | அருணாசலம்புதூர், சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 9 | 9000 | ஆம் | – |
| 8 | தினசரி சந்தை அருகில், ஜங்சன் மெயின் ரோடு, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 11 | 9000 | ஆம் | – |
| 9 | நல்ல கிணறு, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்) | 13 | 9000 | ஆம் | – |
| 10 | நல்ல கிணறு, சமுதாயக்கழிப்பிடம் (பெண்) | 13 | 9000 | ஆம் | – |
| 11 | அறிவுசார் மையம் (ஆண்/பெண்) | 13 | 9000 | ஆம் | – |
| 12 | அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பின்புறம் ஜலகண்டாபுரம் மெயின் ரோடு, சமுதாயக்கழிப்பிடம் (பெண்) | 15 | 9000 | – | இல்லை |
| 13 | ஆணைகவுண்டன்வளவு, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 16 | 9000 | – | இல்லை |
| 14 | புலவன் சந்து, சமுதாயக்கழிப்பிடம் | 20 | 9000 | ஆம் | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ஆண்) | | | | |
| 15 | புலவன் சந்து, சமுதாயக்கழிப்பிடம் (பெண்) | 20 | 9000 | ஆம் | – |
| 16 | புலவன் சந்து, சமுதாயக்கழிப்பிடம் (பெண்) | 20 | 9000 | ஆம் | – |
| 17 | அம்பேத்கார் தெரு, சமுதாயக்கழிப்பிடம் (பெண்) | 22 | 9000 | ஆம் | – |
| 18 | அம்பேத்கார் தெரு, சமுதாயக்கழிப்பிடம் (பெண்) | 22 | 9000 | – | இல்லை |
| 19 | செங்குந்தர் மண்டபம் பின்புறம்,சமுதாயக்கழிப்பிடம் (ஆண்) | 22 | 9000 | ஆம் | – |
| 20 | எம்.ஜி.ஆர்.காலனி, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 24 | 9000 | ஆம் | – |
| 21 | சமத்துவபுரம், சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 25 | 9000 | ஆம் | – |
| 22 | கீழ்சின்னாகவுண்டம்பட்டி, சமுதாயக்கழிப்பிடம் (ஆண்/பெண்) | 26 | 9000 | ஆம் | – |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள 22 கழிப்பிடங்களில் 16 எண்ணிக்கை கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகள் அவசர, அவசியத்தினை கருதி பட்டியலில் குறிப்பிட்டுள்ள 18 எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் சுத்தம் செய்திட, ஏற்கனவே வழங்கியுள்ள கட்டண விகிதத்தில் 01.02.2026 முதல் 31.12.2026 வரையிலான காலங்களுக்கு Shubham Ganga Seva Sansthan, Bangalore நிறுவனத்திற்கு பணி நீடிப்பு ஆணை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் உள்ள கழிப்பிடங்களில் மொத்தம் 22 ல் உபயோகத்தில் உள்ள 16 கழிப்பிடங்கள் தவிர்த்து மீதம் 6 கழிப்பிடங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளவேண்டி உள்ளதால் 16 கழிப்பிடங்களுக்கு மட்டும் பணிகளுக்கான தொகை வழங்கவும், மீதமுள்ள 6 கழிப்பிடங்கள் மராமத்து பணிகள் முடிவடைந்து செயல்பாட்டிற்கு வந்த பிறகு மேற்கண்ட நிறுவனத்திற்கு சுத்தம் செய்யும் பணியை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1131 (3)**

தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள வார்டுகளுக்கு பொதுசுகாதாரப்பிரிவு கீழ் தினசரி டெங்கு வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு தற்காலிகமாக DBC பணிக்கு வீரதமிழச்சி மகளிர் குழு 13 நபர்கள் மற்றும் ஜான்சி ராணி மகளிர் குழு 14 நபர்கள் ஆக மொத்தம் 27 நபர்களுக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு குறைந்தபட்ச விலைப்புள்ளி அடிப்படையில் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது ஒப்பந்தபுள்ளி காலம் **31.01.2026** தேதியுடன் முடிவடைவுள்ளதால், பொதுசுகாதார பணிகள் அவசியத்தை கருத்தில் கொண்டு பணிகள் மேற்கொள்ள ஜான்சிராணி மகளிர் சுய உதவிக்குழு, மற்றும் வீரதமிழச்சி மகளிர் சுய உதவிக்குழு இரண்டிற்கும் மூன்று மாத காலங்களுக்கு பணி நீட்டிப்பு செய்திட **(பிப்ரவரி–2026 முதல் ஏப்ரல்–2026 வரை)** மூன்று மாதங்களுக்கு நாள் ஒன்றிற்கு ஊதியம் ரூ.498 என 27 நபர்களுக்கு 89 நாட்கள் மூன்று மாதங்களுக்கான செலவினம் தொகை ரூ.12.70/– இலட்சம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, கொசுப்புழு ஒழுப்பு பரவலை தடுக்க 27 நபர்கள் கொண்ட வீரத்தமிழச்சி மற்றும் ஜான்சி ராணி மகளிர் சுய உதவி குழுவிற்கு 02/2026 முதல் 04/2026 மூன்று மாதங்களுக்கு பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி பணி நீடிப்பு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.07/2023/எச்1)
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1132 (4)**

தாரமங்கலம் நகராட்சி 27 வார்டுகளின் பொது சுகாதாரப்பணிகளில் கொசு ஒழிப்பு மருந்துகளும் நிரந்த தூய்மை பணியாளர்களுக்கு தேவைப்படும் தளவாட பொருட்களும் கொள்முதல் செய்வதற்கான செலவின தொகை ரூ.2.00/– இலட்சம் ஆகும். அதற்கான செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தாரமங்கலம் நகராட்சி 27 வார்டுகளின் பொது சுகாதாரப்பணிகளில் கொசு ஒழிப்பு மருந்துகளும் மற்றும் தளவாட பொருட்களும் கொள்முதல் செய்வதற்கான செலவின

தொகை பொதுசுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1133 (5)**

தாரமங்கலம் நகராட்சி பொதுசுகாதாரப்பணி வார்டு எண்கள்.7,11,12 ஆகிய வார்டுகளில் JCP இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனத்தின் மூலம் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்திட 07.11.2025 ஆம் தேதியன்று வெள்ளிக்கிழமை உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு கீழ்கண்டவாறு.

| வ. எண் | விவரம் | துரைமுருகன் எர்த் மூவர்ஸ், ஆனைக்கவுண்டன் வளவு, தாரமங்கலம் | Shri Vinayaga Constructions ,Omalur. | P.K.S எர்த் மூவர்ஸ் & டிப்பர், பாரக்கல்லூர் தாரமங்கலம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.7, நங்கவள்ளி மெயின்ரோடு, விநாயகர் மெயின் ரோடு வார்டு எண்.11 சங்ககிரி மெயின்ரோடு வார்டு எண். 12, ஜலகண்டாபுரம் மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் JCP இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனத்தின் மூலம் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல். | 1 மணி நேரம் JCP வாடகை ரூ.1250<br>1 மணி நேரம் டிப்பர் பணிக்கு ரூ.1300 | 1 மணி நேரம் JCP வாடகை ரூ.1100<br>1 மணி நேரம் டிப்பர் பணிக்கு ரூ.1000 | 1 மணி நேரம் JCP வாடகை ரூ.1200<br>1 மணி நேரம் டிப்பர் பணிக்கு ரூ.1200 |
| | | 1 மணி நேர பணிக்கு -ரூ.2550 | 1 மணி நேர பணிக்கு -ரூ.2100 | 1 மணி நேர பணிக்கு - ரூ.2400 |
| | | பணியின் மொத்த செலவினம் - ரூ.4.95/– இலட்சம் | பணியின் மொத்த செலவினம் - ரூ.4.85/– இலட்சம் | பணியின் மொத்த செலவினம் - ரூ.4.90/– இலட்சம் |

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற குறைந்தபட்ச விலைப்புள்ளி வழங்கியுள்ள **''SHRI VINAYAGA**

**CONSTRUCTIONS M.OLAIPATTY,OMALUR''** நிறுவத்தின் விலைப்புள்ளி ஏற்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1134 (6)**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் விண்ணப்ப படிவங்கள், எம்.எப் படிவங்கள், பதிவேடுகள், பேப்பர்கள் போன்றவை **2026–2027** ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்களை அரசு அனுமதி பெற்ற கூட்டுறவு அச்சக தொழிற்சேவை சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**8.00/–** இலட்சம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.100/2026/எப்2)
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1135 (7)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான நவீன இறைச்சி கடை எண்.**3**–னை **2016–2017** ஆம் ஆண்டிற்கு ஏலம் எடுத்த ஏலதாரர் திரு.பொன்னுசாமி, சேடப்பட்டி தாரமங்கலம் என்பவர் ஏலம் எடுத்ததில் **2025–2026** ஆம் ஆண்டிற்கு வாடகை தொகை செலுத்தாமல் நிலுவை உள்ளதால் இறதி அறிவிப்பு அனுப்பப்பட்டு குத்தகை உரிமம் இரத்து செய்யப்பட்டது. எனவே **2026–2027** ஆம் ஆண்டிற்கு நவீன இறைச்சி கடை எண்.**3**–னை ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.15/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1136 (8)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் அமைந்துள்ள **8** வணிக வளாக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து தருமாறு மண்டல துணைக்குழு மற்றும் உறுப்பினர்களுக்கு ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து, அதன் அடிப்படையில் மண்டல

துணைக்குழு மற்றும் உறுப்பினர்களால் கீழ்க்கண்ட பட்டியலின் படி, வாடகை நிர்ணயம் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே 2026–2027 ஆம் ஆண்டிற்கு மண்டல குழுவின் பரிந்துரைக்கேற்ப ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அரசாணை (2ப) நிலை எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2024ன் படி, சேலம் மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளுக்கு சொந்தமான கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் நிலவும் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை தீர்வுகான நாமக்கல் மாநகராட்சியில் 11.11.2025 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான துணைக்குழு (Sub-Committee) கூட்ட நடவடிக்கைகளின் (Minutes of Meeting) விபரங்கள்.

**மண்டல துணைக்குழு (Sub-Committee) அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களின் விபரங்கள்**

| வ. எண் | பெயர் | பதவி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | திரு.ப.அசோக்குமார் | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் | தலைவர் |
| 2. | திரு.க.சிவக்குமார் | மாநகராட்சி ஆணையாளர், நாமக்கல் | கூட்டுநர் |
| 3. | திரு.சேகரன் | மண்டல செயற்பொறியாளர், சேலம் | உறுப்பினர் |
| 4 | திருமதி.S.காயத்திரி | வருவாய் அலுவலர் (பொ) கிருஷ்ணகிரி நகராட்சி | உறுப்பினர் |
| 5. | திரு.R.ஜெயவர்மன் | நகரமைப்பு அலுவலர் (பொ) தருமபுரி நகராட்சி | உறுப்பினர் |

**மண்டல துணைக்குழு (Sub-Committee) கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் விபரங்கள்.**

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.கோபிநாத் | நகராட்சி ஆணையாளர், இடைப்பாடி |
| 2. | திருமதி.எஸ்.கோமதி | உதவிப்பொறியாளர், இடைப்பாடி நகராட்சி |
| 3. | திருமதி.மு.கவிதா | வருவாய் ஆய்வாளர் இடைப்பாடி நகராட்சி |
| 4. | திரு.மு.சுதர்சன் | நகராட்சி ஆணையாளர், இடங்கணசாலை மற்றும் தாரமங்கலம் (பொ) |
| 5. | திரு.வி.தினேஷ்குமார் | நகராட்சி பொறியாளர், இடங்கணசாலை |
| 6. | திரு.எஸ்.எஸ்.கார்த்திக் | நகராட்சி பொறியாளர் (பொ) தாரமங்கலம் |
| 7. | திருமதி.ம.ஆர்த்தி | வருவாய் ஆய்வாளர், தாரமங்கலம் நகராட்சி |
| 8. | திரு.மா.சீ.பாலசந்தர் | வருவாய் ஆய்வாளர், இடங்கணசாலை நகராட்சி |
| 9. | திரு.சீ.ரமேஷ் | நகராட்சி ஆணையாளர், கொமராபாளையம் நகராட்சி |
| 10. | திரு.கே.சரவணன் | பணி மேற்பார்வையாளர், கொமராபாளையம் நகராட்சி |
| 11. | திரு.வெ.கோபி | வருவாய் ஆய்வாளர் கொமராபாளையம் நகராட்சி |

| | | |
|---|---|---|
| 12. | திருமதி.யா.நிவேதிதா | நகராட்சி ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி |
| 13. | திரு.அ.ரவி | உதவிப்பொறியாளர், இராசிபுரம் நகராட்சி |
| 14. | திரு.இரா.சீனிவாசன் | வருவாய் ஆய்வாளர், இராசிபுரம் நகராட்சி |
| 15. | திரு.பெ.முனியப்பன் | நகராட்சி ஆணையாளர், புகளூர் நகராட்சி |
| 16. | திரு.ப.மாணிக்கம் | வருவாய் ஆய்வாளர், புகளூர் நகராட்சி |
| 17. | திரு.கு.சு.ரகு செல்வக்குமார் | பணி ஆய்வாளர், புகளூர் நகராட்சி |
| 18. | திரு.எஸ்.கவின்குமார் | உதவிப்பொறியாளர், மேட்டூர் நகராட்சி |
| 19. | திரு.வி.சசிக்குமார் | உதவி வருவாய் அலுவலர், மேட்டூர் நகராட்சி |
| 20. | திரு.ஆர்.வாசுதேவன் | வருவாய் ஆய்வாளர், மேட்டூர் நகராட்சி |
| 21. | திரு.கே.பழனியப்பன் | வருவாய் அலுவலர், திருச்செங்கோடு நகராட்சி |
| 22. | திரு.எஸ்.ஸ்ரீராம் | வருவாய் ஆய்வாளர், திருச்செங்கோடு நகராட்சி |

தாரமங்கலம் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்ட கடைகளுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்யக்கோரி நகராட்சி ஆணையாளர், தாரமங்கலம் அவர்களால் பட்டியலிடப்பட்ட விபரங்களை மண்டல துணைக்குழுவிற்கு கீழ்க்கண்டவாறு சமர்பிக்கப்பட்டது.

| வ எண் | கடைகள் அமைந்துள்ள இடம் மற்றும் கடை எண் | நீளம் மற்றும் அகலம் | மொத்த சஅடி. | கடைசியாக உள்ள வாடகை தொகை | தனியார் கடைகளின் விவரம் | நீளம் மற்றும் அகலம் | தனியார் கடை வாடகை விபரம் | களம் ல் 4 கண்ட சதுரஅடிக்கு இணையான தனியார் வாடகை விவரம் | தற்போதைய PWD RATE மதீப்பிட்டின் படி வாடகை மதிப்பு | நகராட்சி ஆணையாளரால் தற்போது கோரும் வாடகை விவரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | வணிக வளாக கடை எண்1. | 10x10 | 100 | புதிய கடைகள் | சீனிவாசா காபிபார் | 19x10 | 19000/ 190 சதுரடி | 19000 | 2400/ 100 சதுரடி | 8400 |
| 2 | வணிக வளாக கடை எண்.2 | 10x10 | 100 | புதிய கடைகள் | சீனிவாசா காபிபார் | 19x10 | 19000/ 190 சதுரடி | 19000 | 2400/ 100 சதுரடி | 8400 |
| 3 | வணிக வளாக கடை எண்.3 | 10x10 | 100 | புதிய கடைகள் | சின்னையன் டீ ஸ்டால் | 22x10 | 14000/ 220 சதுரடி | 14000 | 2400/ 100 சதுரடி | 8400 |
| 4 | வணிக வளாக கடை எண்.4 | 10x10 | 100 | புதிய கடைகள் | சின்னையன் டீ ஸ்டால் | 22x10 | 14000/ 220 சதுரடி | 14000 | 2400/ 100 சதுரடி | 8400 |
| 5 | வணிக வளாக கடை எண்.5 | 10x10 | 100 | புதிய கடைகள் | உதயம் டைலர் | 16x08 | 7000/ 128 சதுரடி | 7000 | 2400/ 100 சதுரடி | 8400 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | வணிக வளாக கடை எண்.6 | 10x10 | 100 | புதிய கடைகள் | உதயம் டைலர் | 16x08 | 7000/ 128 சதுரடி | 7000 | 2400/ 100 சதுரடி | 8400 |
| 7 | வணிக வளாக கடை எண்.7 | 10x10 | 100 | புதிய கடைகள் | சி.ஆர்.பேக்கரி | 16x10 | 14000/ 160 சதுரடி | 14000 | 2400/ 100 சதுரடி | 8400 |
| 8 | வணிக வளாக கடை எண்.8 | 10x10 | 100 | புதிய கடைகள் | சிறுதானிய கடைகள் | 11x20 | 15000/ 120 சதுரடி | 15000 | 2400/ 100 சதுரடி | 8400 |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வ.எண்.1 முதல் 8 வரை தாரமங்கலம் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்ட 8 கடைகளுக்கு கலம் எண்.11ல் குறிப்பிடப்பட்ட மாத வாடகை தொகைகளுக்கு நிர்ணயம் செய்து தர தாரமங்கலம் நகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், மண்டல துணைக்குழுவால் தாரமங்கலம் நகராட்சி கடைகளுக்கு அருகில் உள்ள தனியார் கடைகளின் மாத வாடகை மற்றும் பொதுப்பணித்துறையின் தற்போது மாத வாடகை மதிப்பீடு ஆகியவற்றுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து இறுதியாக கலம் 11ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மாத வாடகையாக நிர்ணயம் செய்ய மண்டல துணைக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மேற்படி மாதவாடகை குறித்து மண்டல துணைக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டதை நகர்மன்ற பொருள் வைத்து ஒப்புதல் பெற்று முடிவு செய்யலாம் என தாரமங்கலம் ஆணையாளர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மண்டல துணைக்குழுவால் நகராட்சியால் புதியதாக கட்டப்பட்ட 8 கடைகளுக்கு அருகில் உள்ள தனியார் கடைகளின் மாத வாடகை மற்றும் பொதுப்பணித்துறையின் தற்போது மாத வாடகை மதிப்பீடு ஆகியவ0ற்றுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து மாத வாடகையாக நிர்ணயம் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1071/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1137 (9)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாகத்தில் அமைந்துள்ள 16 கடைகள் 2025–2026 ஆம் ஆண்டிற்கு ஏலம் விடப்பட்டது. இந்நிலையில் நகர்மன்ற உறுப்பினர்களான வார்டு எண்.1 திரு.கே.பழனிசாமி, வார்டு எண்.3 திரு.ஆர்.குமரேசன், வார்டு எண்.4 திருமதி.எ.சாமூண்டீஸ்வரி வார்டு எண்.18 திருமதி.எஸ்.அமுதா மற்றும் திரு.பூபதி த/பெ

ராஜேந்திரன் ஆகியோர் கடை எண்.10—யை தவிர மற்ற கடைகள் குறைந்த ஏலத்திற்கு விடப்பட்டுள்ளதாகவும், நகராட்சிக்கு இழப்பு ஏற்படும் நிலை உள்ளதாகவும், மீண்டும் மறு ஏலம் நடத்த வேண்டும் எனவும், நேரிலும் கடிதம் வாயிலாகவும் தெரிவித்துள்ளார். அதே போன்று நகராட்சி நிர்வாகத்தால் நல்ல முறையில் ஏலம் விடப்பட்டது என பொதுமக்கள் சிலர் கடிதம் அளித்துள்ளனர். உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கும் நகராட்சி நிர்வாகத்தால் நல்ல முறையில் ஏலம் நடத்தப்பட்டமைக்கும் நன்றி தெரிவித்தும் ஓராண்டிற்குரிய வாடகை செலுத்த தயாராக உள்ளதாகவும் கடிதம் அளித்துள்ளனர். கீழ்கண்ட விவரப்படி ஏலம் எடுத்த ஏலதாரர் பட்டியல் மற்றும் வரப்பெற்ற ஆட்சேபனை குறித்த கடிதம் மற்றும் ஏலம் நடவடிக்கைகள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு கடிதம் ந.க.எண்.1143/2025/அ1 நாள்.11.09.2025 ஆம் தேதி உரிய தெளிவுரை வழங்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களது கடிதம் ந.க.எண்.3967/2025/அ5 நாள்.07.10.2025—இல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள் மற்றும் வணிக வளாகங்களின் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுக்கள் நெறிமுறைகளை பின்பற்றுமாறும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 மற்றும் தொடர்புடைய அரசின் அறிவுரைகளை பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு—78 (3)—இல் கூறியதாவது: நகராட்சிக்கு சொந்தமான நிலம் அல்லது கட்டிடம் எதனையும் பயன்படுத்துவதற்காகவோ அதனைக் கையுடைமை கொள்வதற்காகவோ நபர் எவருக்கும், விதிகளுக்கிணங்க மன்றமானது தான் நிருணயிக்கக்கூடிய கட்டண வீதத்திலும் கால அளவுக்கும் உள்ள உரிமத்தை அல்லது குத்தகை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தாரமங்கலம் நகராட்சி வாரச்சந்தையில் ஏற்கனவே ஏலம் விடப்பட்ட 15 கடைகளுக்கும் மன்றம் முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1143/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1138 (10)**

தாரமங்கலம் நகராட்சியில் கணினியில் தட்டச்சு செய்தும் மின்னஞ்சல் மூலமும் மற்றும் மென்பொருளில் பதிவேற்றம் செய்தல் அனைத்து பணிகளையும் வெளிகொணர்வு முகமை

முறையில் திருவாளர்.எம்.ஆர்.எஸ்.சிஸ்டம், 7/528, பன்னப்பட்டி, காடையாம்பட்டி தாலுக்கா, சேலம் என்ற நிறுவனத்தின் மூலம் **2025–2026** ஆம் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.**1051** நாள்.**14.07.2025–**இன் படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கான ஒப்பந்த காலமானது **31.03.2026** ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், மீண்டும் **2026–2027** ஆம் ஆண்டிற்கு மேற்படி பணியினை நகராட்சி சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ளவும், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செந்தூர விலைவிகிதப்பட்டியல் படி நாள் ஒன்றிற்கு ரூ.**809/–** வீதம் நிறுவனத்திற்கு தொகை வழங்ககோரி திருவாளர்.எம்.ஆர்.எஸ்.சிஸ்டம், 7/528, பன்னப்பட்டி, காடையாம்பட்டி தாலுக்கா, சேலம் என்ற அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனம் **23.12.2025** ஆம் தேதியில் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி **2026–2027** ஆம் ஆண்டிற்கு வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தபணி புதுப்பித்து பணி உத்தரவு முற்றிலும் தற்காலிகமாக வழங்குவதற்கும் மற்றும் செலவினம் மேற்கொள்வது குறித்தும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் மன்றபொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **2026–2027** ஆம் ஆண்டிற்கு மீண்டும் திருவாளர்.எம்.ஆர்.எஸ்.சிஸ்டம், பன்னப்பட்டி என்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் தாரமங்கலம் நகராட்சியில் கணினியில் தட்டச்சு செய்தும் மின்னஞ்சல் மூலமும் மற்றும் மென்பொருளில் பதிவேற்றும் செய்தல் மற்றும் அனைத்து பணிகளையும் வெளிக்கொணர்வு முறையில் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையிலும், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது செந்தூர விலைவிகித பட்டியலின் படி நாள் ஒன்றிற்கு ரூ.**809/–** என்ற விலைவிகிதத்தில் நகராட்சி சட்ட திட்டங்களுக்கும், நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகளை செய்வதற்கும் அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் **2026–2027** ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது செந்தூர விலைவிகிதப்பட்டியல் திருத்தியமைக்கப்படின் அதன் விலைவிகிதத்தின் அடிப்படையில் தொகை வழங்கவும், அதற்குரிய செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1139 (11)**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியற் பிரிவு, பொதுசுகாதாரப் பிரிவு மற்றும் ஆணையாளர் அறை முதலியவற்றில் அன்றாட பயன்படுத்தப்பட்டு

வரும் கணினிகள் – 12, பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் சிறியது–10 பெரியது – 2 மற்றும் மேற்படி பிரிண்டர்களில் பயன்படுத்தப்பட்டு வரும் டோனர்கள் மற்றும் இவ்வலுவலகத்தில் பயன்படுத்தப்படும் UPS முதலியவற்றிற்கு 01.04.2025 முதல் 31.03.2026 முடிய காலத்திற்கு பராமரிக்கவும், இதர அத்தியவசிய பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டு, வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைப்புள்ளி வழங்கிய M/S Logic Info tech, ஒப்பந்ததார் அவர்களுக்கு 2025–2026 நிதி ஆண்டிற்கு தொகை ரூ.2,50,000/– இலட்சம் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 2025–2026 நிதி ஆண்டில் சிறப்பு வார்டு குழு கூட்டங்கள் நடத்தப்பட்டமைக்கும், தேர்தல் SIR பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் மின்சுற்று காரணமாக சேதமடைந்த கணினிகளை சரிசெய்வதற்கும் மேற்படி பணிக்கு ஆகும் கூடுதல் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/– இலட்சம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.124/2025/பி1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1140 (12)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.17, ஜலகண்டாபுரம் மெயின்ரோடு பகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை சிமெண்ட் சாலையாக அமைத்தல் பணி ரூ.5.00/– இலட்சம் ஆகும். நகர்மன்ற தீர்மான எண்.988 நாள்.15.05.2025–இல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025 தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.17, ஜலகண்டாபுரம் மெயின்ரோடு பகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை சிமெண்ட் சாலையாக அமைத்தல் பணி. | ரூ.5.00/– | Palanisamy Civil Construction Tharamangalam | –0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 19.85% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy Civil Construction** –0.08% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1141 (13)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.18, மாதா கோவில் அருகில் லாட்டரி சீனி கடை மற்றும் முருகேசன் வீடு வரை ஆகியப் பகுதிகளில் சாக்கடை அமைத்தல் பணி. ரூ.5.00/– இலட்சம் ஆகும். நகர்மன்ற தீர்மான எண்.905 நாள்.31.12.2024–இல் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025 தேதியன்று முதன் முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.18, மாதா கோவில் அருகில் லாட்டரி சீனி கடை மற்றும் முருகேசன் வீடு வரை ஆகியப் பகுதிகளில் சாக்கடை அமைத்தல் பணி. | ரூ.5.00/– | Palanisamy Civil Construction Tharamangalam | –0.09% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 6.73% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy Civil Construction** –0.09% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1142 (14)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.23 விநாயகர் கோவில் அருகில் பழுதடைந்த பழைய மழைநீர் வடிகால் கான்கீரிட் பக்க சுவரை எடுத்து விட்டு புதிதாக அதே இடத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி ரூ.1.00/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1068 நாள்.25.09.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 19.12.2025–தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண். 23 விநாயகர் கோவில் அருகில் பழுதடைந்த பழைய மழைநீர் வடிகால் கான்கீரிட் பக்க சுவரை எடுத்து விட்டு புதிதாக அதே இடத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | ரூ.1.00/– | Palanisamy civil Construction Tharamangalam | –0.36% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 17.19% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy civil Construction,** Tharamangalam நிறுவனம் –0.36% குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1143 (15)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.3, பாரக்கல்லூர் கழிப்பிட பராமரிப்பு பணி மற்றும் வார்டு எண்.22, அம்பேத்கார் நகர் பகுதியில் செப்டிக்டேங் அமைத்தல் பணி ரூ.1.50/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1094 நாள்.25.09.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 17.11.2025–தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.3, பாரக்கல்லூர் பகுதியில் கழிப்பிட பராமரிப்பு பணி மற்றும் வார்டு எண்.22, அம்பேத்கார் நகர் பகுதியில் செப்டிக்டேங் அமைத்தல் பணி | ரூ.1.50/– | Shanmugam Contractor Tharamangalam | –0.33% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | +0.61% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Shanmugam Contractor** –0.33% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1144 (16)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.16 பெருமாள் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி ரூ.5.00/–இலட்சத்திற்கு இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1069 நாள். 25.09.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025–தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.16 பெருமாள் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 5.00/– | Palanisamy civil Construction | –0.09% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M.Ramasamy Tharamangalam | 0.71% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy civil Construction** –0.09% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1145 (17)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.15, கோழிகாட்டானூர் மாரியம்மன் கோவில் தெருவில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினிடேங் அமைத்து மற்றும் குட்டு அமைத்து உயரப்படுத்துதல் ரூ.1.00/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.979 நாள்.02.04.2025–ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025–தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.15, கோழிகாட்டானூர் மாரியம்மன் கோவில் தெருவில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினிடேங் அமைத்து மற்றும் குட்டு அமைத்து உயரப்படுத்துதல் பணி | 1.00/– | Palanisamy civil Construction | –1.71% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 2.08% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy civil construction** –1.71% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1146 (18)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.14, வேலாயுதசாமி கோவில் அருகில் ஜலகண்டாபுரம் மெயின்ரோட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கழிப்பறை பராமரிப்பு பணி ரூ.2.25/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1095 நாள்.25.09.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025–தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரா் பெயர் மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.14, வேலாயுதசாமி கோவில் அருகில் ஜலகண்டாபுரம் மெயின்ரோட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடு நிலைப்பள்ளியில் கழிப்பறை பராமரிப்பு பணி | ரூ.2.25/– | Palanisamy civil Construction | –0.37% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 12.89% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy civil Construction** –0.37% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1147 (19)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.4—இல் கைபம்புகளை அகற்றிவிட்டு மின் மோட்டார் பொருத்தி மினி டேங் அமைத்தல் பணி ரூ.4.90/—இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1073 நாள்.25.09.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 19.12.2025 தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.4, நங்கிரிப்பட்டி மாதேஷ் வீடு அருகில், பெருமாள் வீடு அருகில் மற்றும் சின்னபெரியாம்பட்டி ஆகிய இடங்களில் கைபம்புகளை அகற்றிவிட்டு மின் மோட்டார் பொருத்தி மினி டேங் அமைத்தல் பணி | ரூ.4.90/— | Palanisamy Civil Construction | —0.29% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 1.76% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Palanisamy Civil Construction** —0.29% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1148 (20)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.2, சின்டெக்ஸ் டேங் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி ரூ. 1.50/—இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1074 நாள்.25.09.2025 நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025—தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.2, மூப்பர் தெரு மின்மோட்டார் இறக்கி சின்டெக்ஸ் டேங் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | ரூ. 1.50/– | Arul Lakshmi Construction Tharamangalam | –0.26% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Palanisamy Civil Construction Tharamangalam | 1.03% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Arul Lakshmi Construction** –0.26% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1149 (21)**

தாரமங்கலம் நகராட்சியில் பழுதான பழைய சோடியம் லைட்டுகள், டியூப் லைட்டுகள் சரி செய்ய தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ரூ.3.00/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1122 நாள்.15.12.2025 நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025– தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் பழுதான பழைய சோடியம் லைட்டுகள், டியூப் லைட்டுகள் சரி செய்ய தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி. | ரூ.3.00/– | Shree Ram Electricals & Agencies, Salem | –0.35% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arupadai Agencies, Salem | +4.04% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள **Shree Ram Electricals & Agencies**, –0.35% குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1150 (22)**

தாரமங்கலம் நகராட்சி வார்டுஎண்.1 கருக்குப்பட்டி பகுதியில் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங் அமைத்தல் பணி ரூ.2.50/– இலட்சத்திற்கு இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1070 நாள்.25.09.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025 தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.1 கருக்குப்பட்டி பகுதியில் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங் அமைத்தல் பணி | ரூ.2.50/– | V&V Construction Tharamangalam | –0.23% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | 1.76% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **V&V Construction, Tharamangalam நிறுவனம் –** 0.23% ஒப்பந்தபுள்ளி ஏற்க பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1151 (23)

தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 ஆகிய வார்டுகளில் உள்ள கேட்வால்வு பழுதுகள் மேற்கொள்ளும் பணி ரூ.4.00/— இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1011 நாள்.15.05.2025 — ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 19.12.2025—தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம்நகராட்சி 1 முதல் 27 ஆகிய வார்டுகளில் உள்ள கேட்வால்வு பழுதுகள் மேற்கொள்ளும் பணி | 4.00/— | Kalai Construction | —0.21% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Arul lakshmi Construction Tharamangalam | —0.01% மதிப்பீட்டை விடஅதிகம் |
| | | | Palanisamy civil Construction Tharamangalam | 5.26 % மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விடகுறைவான சதவீதம் கொடுத்துள்ள, **Kalai Construction** —0.21% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1152 (24)

தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டுகளில் உள்ள பைப்லைன் லீக்கேஜ் மேற்கொள்ளும் பணி.ரூ.4.00/— இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1012 நாள்.15.05.2025 — ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 19.12.2025—தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
